**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**OS.No.554/2021 and 16/2016 P.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | ஆனந்தராஜன் |
| த/பெ. | பாலகங்காதரதிலகர் |
| வயது | 44 |
| வசிப்பிடம் | ஆதம்பாக்கம், சென்னை |
| தொழில் | வழக்கறிஞர் |

**முதல் விசாரணை** **08.08.2025**

நான் இந்த வழக்கில் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 05.06.2012 தேதியிட்ட முதல் பிரதிவாதியின் பொது அதிகார முகவர் 2வது பிரதிவாதி வாதிக்கு எழுதிக் கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1. 16.11.2004 தேதியிட்ட முதல் பிரதிவாதிக்கு சென்னை பெருநகர குழுமம் அவர்களால் எழுதிக்கொடுக்கப்பட்ட கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2. 15.09.2010 தேதியிட்ட முதல் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த பொது அதிகார பத்திரம் அசல் வா.சா.ஆ.3. 13.09.2010 தேதியிட்ட முதல் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியிடமிருந்து ரூபாய் 25 லட்சம் பெற்றுக் கொண்டதற்கான கிரய ரசீது வா.சா.ஆ.4 (பிரதிவாதி தரப்பு ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). 21.09.2021 தேதியிட்ட வாதி, முதல் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.5. 20.10.2021 தேதியிட்ட முதல் பிரதிவாதி, வாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அசல் வா.சா.ஆ.6. 08.07.2021 தேதியிட்ட மறைமலைநகர் நகராட்சி வழங்கியுள்ள வீட்டு வரி மற்றும் குழாய் வரி மாற்றியதற்கான அலுவலக நடவடிக்கையின் உத்தரவு வா.சா.ஆ.7. 02.08.2021 தேதியிட்ட என் பெயரில் சொத்து வரி கட்டியதை காட்டும் இயங்கலை சான்று (online copy) வா.சா.ஆ.8. 01.01.2021 தேதியிட்ட குடிநீர் வரிகட்டியதை

காட்டும் இயங்கலை சான்று (online copy) வா.சா.ஆ.9. 09.12.2021 தேதியிட்ட வீட்டு வரி கட்டியதை காட்டும் இயங்கலை சான்று (online copy) வா.சா.ஆ.10. 27.07.2021 தேதியிட்ட மின் இணைப்பு மாறுதலை காட்டும் மின்வாரிய அலுவலக நடவடிக்கையின் உத்தரவு வா.சா.ஆ.11. 09.11.2021 தேதியிட்ட மின் கட்டணம் செலுத்தியதை காட்டும் இயங்கலை நகல் (online copy) வா.சா.ஆ.12. 10.02.2021 தேதியிட்ட வழக்கு சொத்திற்குரிய வில்லங்க சான்று நகல் வா.சா.ஆ.13. வழக்கு சொத்திற்குரிய வில்லங்க சான்று நகல் வா.சா.ஆ.14.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.